

செங்கல்பட்டு மாவட்டம், அலிசன் காசி மேல்நிலைப்பள்ளியில் செங்கல்பட்டு மாவட்ட நிர்வாகம் மற்றும் தமிழ்நாடு அறிவியல் இயக்கம், செங்கை பாரதியார் மன்றம் இணைந்து நடத்தும் 6வது செங்கை புத்தக திருவிழாவை குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் துவங்கி வைத்தார். இதில் மாவட்ட ஆட்சித்தலைவர் ச.அருண்ராஜ், காஞ்சிபுரம் நாடாளுமன்ற உறுப்பினர் க.செல்வம், சட்டமன்ற உறுப்பினர்கள் வரலட்சுமி மதுசூதனன், எஸ்.எஸ்.பாலாஜி மற்றும் உள்ளாட்சி பிரதிநிதிகள், அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்தநாளை

# விவசாயிகளும் - பொதுமக்களும் பயன்பெறும் வகையில் நலத்திட்ட உதவிகள் வழங்கப்படும்!

## தி.மு.க. விவசாய அணி கூட்டத்தில் தீர்மானம்!

சென்னை,பிப்.21-

தி.மு.க. விவசாய அணியின் மாநில நிர்வாகிகள் கலந்துரையாடல் கூட்டம் 18.02.2025 செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3.00 மணியளவில் சென்னை, அண்ணா அறிவாலயத்தில் ஏ.கே.எஸ்.விஜயன், தி.மு.க. விவசாய அணி செயலாளர் அவர்களின் முன்னிலையிலும், விவசாய அணி துணைத் தலைவர்கள் இரா.தமிழ்மணி மற்றும் எஸ்.கே.வேதரத்தினம் ஆகியோரின் தலைமையிலும் நடைபெற்ற கூட்டத்தில் இணைச்

செயலாளர்கள் எஸ்.அப்துல்காதர், ஆர்.அருட்செல்வம் கள்ளிப்பட்டி மணி, ம.முத்துராமலிங்கம், செஞ்சி பா.செந்தமிழ்செல்வன் குறிஞ்சி என்.சிவகுமார், மற்றும் துணைச் செயலாளர்கள், முதுகுளத்தூர் கே.முருகவேல், ஆர்.டி.ஏ.ஆதிசேஷன், ஆர்.கணேசன், டி.எம்.அரியப்பன், டேம் டி.வெங்கடேசன், என்.நல்லசேதுபதி, ஜித்து (எ) ராஜரத்தினம், தங்க சித்தார்தன், குணசேகரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்:-

கழகத் தலைவர் அவர்களின் பிறந்த நாளை அந்தந்த மாவட்டங்களில் விவசாயிகளுக்கும், பொது மக்களுக்கும் பயன்பெறுகின்ற வகையில் நலத்திட்ட உதவிகள் வழங்கி சிறப்பாக கொண்டாடப்பட வேண்டும் என விவசாய அணியின் சார்பாக மாவட்ட ஒன்றிய மாநகர, நகர அமைப்பாளர்களை இக்கூட்டம் கேட்டுக் கொள்கிறது.

தமிழ்நாடு முதல்வர், திராவிட நாயகர் மற்றும் கழகத் தலைவர் அவர்களின் சாதனைகளை விளக்கி நமது அணியின் சார்பாக மண்டல வாரியாக தமிழகம் முழுவதும் மாநாடு நடத்துவது என தீர்மானிக்கப்பட்டது. மாநாடு நடைபெற அந்தந்த மாவட்ட பொறுப்பு அமைச்சர்கள், மாவட்ட செயலாளர்களை அனுகி அனுமதிபெற்று நடத்திட வேண்டுமென தீர்மானிக்கப்படுகிறது.

2009-ஆம் ஆண்டு அத்திக்கடவு அவினாசி திட்டம் தொடங்குவதற்கு அரசாணை எண்.296, PW(Q1), 14.12.2009-ஐ வெளியிட்டு பணியினை தொடங்கி வைத்தவர் முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள். அதனை கவனத்தில் கொள்ளாத முந்தைய அ.தி.மு.க. அரசு தற்போது தாங்கள் செய்த தாக வெறும் சுய விளம்பரத்திற்காக பெருமை தேடிக்கொள்வது கண்டிக்கத்தக்கது. இத்திட்டத்தை தனிக் கவனத்துடன் முழு வீச்சில் செயல்படுத்துவதற்கு கடந்த 2 ஆண்டுகளில் அனைத்து விவசாயிகளையும் முழுமையாக ஒருங்கினைத்து நிலம் கையகப்படுத்துகின்ற பணியினை எந்த பாகுபாடுகளும் பார்க்காமல் அந்தப் பகுதி விவசாயிகளின் நூற்றாண்டுகாலக் கனவுத் திட்டத்தை நிறைவேற்றித் தந்த பெருமையும் தமிழ்நாடு முதல்வர் தளபதி அவர்களையேச் சாரும்.

திராவிடமாடல் நான்கு ஆண்டுகால ஆட்சியில் தொடர் வெற்றிகளில் ஈரோடு இடைத்தேர்தலில் மகத்தான வெற்றிபெற்ற கழக வேட்பாளர்களின் வெற்றிக்கு பணியாற்றிய அந்த தொகுதி மக்களுக்கும் வாக்காளர்களுக்கும் திராவிடமாடல் ஆட்சியை சிறப்பாக தந்து கொண்டிருக்கிற தமிழ்நாடு முதலமைச்சர் முதல்வர் தளபதி அவர்களுக்கும், துணை முதல்வர் அவர்களுக்கும் இக்கூட்டம் நன்றியையும், பாராட்டையும் தெரிவித்துக்கொள்கிறது .

இவ்வாறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

### சென்னை தெற்கு மாவட்டம்

# மதுரவாயல் 149வது வட்டக் கழக பொது உறுப்பினர் கூட்டம்!

## வட்டக் கழகச் செயலாளர் த.ரமேஷ் அறிக்கை!

சென்னை,பிப்.21-

சென்னை தெற்கு மாவட்டம், மதுரவாயல் தெற்கு பகுதி 149வது வட்டக் கழக பொது உறுப்பினர் கூட்டம் 21.02.2025 மாலை 5.30 மணியளவில் ஸ்ரீதேவிகுப்பம் பிரதான சாலையில் அமைந்துள்ள எண்.173 வட்டக்கழக அலுவலகத்தில் சென்னை தெற்கு மாவட்டச் செயலாளரும், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சருமான மா.சுப்பிரமணியம் அறிவுறுத்தலின் பேரில், மதுரவாயல் தெற்கு பகுதிச் செயலாளர், மதுரவாயல் சட்டமன்ற உறுப்பினர் காரம்பாக்கம் க.கணபதி வழிகாட்டுதலின் பேரில் 149வது வார்டு வட்ட அவைத்தலைவர் எம்.கிருஷ்ணமூர்த்தி தலைமையில் வட்டக் கழகச் செயலாளர் த.ரமேஷ் மதுரவாயல் தெற்கு பகுதி துணைச் செயலாளர் வே.மதியழகன் மற்றும் 149வது வார்டு மாமன்ற உறுப்பினர் செல்வி ரமேஷ் துணைச் செயலாளர்கள் டி.என்.கமலநாதன், எம்.குமார், குப்புராஜேந்திரன், பொருளாளர்பி.எஸ்.துரைசாமி மற்றும் ஆர்.சிவலிங்கம், கே.சரவணன், எம்.ஏ.வி.சீனிவாசன் ஆகியோரின் முன்னிலையில் பொதுஉறுப்பினர் கூட்டம் நடை பெறுகிறது.

இக்கூட்டத்தில் வட்டக் கழக நிர்வாகிகள், பகுதி பிரதிநிதிகள், 149வது வார்டுக்கு உட்பட்ட மாவட்ட பிரதிநிதி, மாவட்ட துணை அமைப்பாளர்கள், பகுதி அமைப்பாளர்கள், பகுதி துணை அமைப்பாளர்கள், மகளிர் அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், வட்ட அணியின் அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள், செயற்குழு உறுப் பினர்கள், கழக முன்னோடிகள் மற்றும் கழகத் தோழர்கள், கழக செயல்வீரர்கள், பாக முகவர்கள் (BI2), பாக அமைப்பாளர்கள் என அனைவரும் கலந்து கொள்ளுமாறு.

அதுபோது மார்ச் 1 தலைவர் முதல்வர் அவர்களின் பிறந்த நாள் விழா மற்றும்

கழக ஆக்கப் பணிகள் குறித்து ஆலோசிக்கப்படுகிறது என்று வட்டக் கழகச் செயலாளர் த.ரமேஷ் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.



தாம்பரம் மாநகராட்சி 4 வது மண்டலத்திற்கு உட்பட்ட 61 வது வார்டு ஸ்ரீராம் நகரில் பொதுப்பணித்துறை சார்பாக நடைபெற்று வரும் மழைநீர் வடிகால்வாய் பணியால் பாதிக்கப்பட்ட அப்பகுதி மக்கள் கொடுத்த கோரிக்கயை 4 வது மண்டல குழு தலைவர் பகுதி கழக செயலாளர் டி.காமராஜ் நேரில் சென்று ஆய்வு செய்ததின் அடிப்படையில் தாம்பரம் மாநகர செயலாளர் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.ஆர்.ராஜா எம்,எல்,ஏ. நேரில் சென்று ஆய்வு மேற்கொண்டார். உடன் பொதுப்பணித்துறை சாம்மந்தப்பட்ட அதிகாரிகளும் மாமன்ற உறுப்பினர்கள் எஸ்.சேகர்,ஹேமாவதி சேகர் மற்றும் வட்டக் கழக நிர்வாகிகள் பொதுமக்கள் உடனிருந்தனர் .



சென்னை தெற்கு மாவட்டக் கழக ஆலோசனைக்கூட்டம் 11.2.2025 செவ்வாய்க்கிழமையன்று காலை பள்ளிக்கரணை ரேடியல் சாலையில் உள்ள பி.ஆர்.மஹாலில் மாவட்ட பொருளாளர் வேளச்சேரி எஸ்.பாஸ்கரன் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் மாவட்டக் கழகச் செயலாளர் அமைச்சர் மா.சுப்பிரமணியன் கலந்துகொண்டு ஆலோசனை உரையாற்றினார். இந்நிகழ்வில் சட்டமன்ற உறுப்பினர்கள் எஸ்.அரவிந்த்ரமேஷ், காரம்பாக்கம் கணபதி, ஏ.எம்.வி.பிரபாகர்ராஜா, தலைமை செயற்குழு உறுப்பினர்கள் துணை மேயர் மு.மகேஷ்குமார், எஸ்.அருணாச்சலம், பாலவாக்கம் க.சோமு மற்றும் தொகுதிப் பொறுப்பாளர்கள் பருதி இளம்சுருதி, சாய்ஸ்ரீராம் பாரதி, மாவட்ட துணைச் செயலாளர்கள் பாலவாக்கம் மு.மனோகரன், வாசுகிபாண்டியன், பகுதி கழக செயலாளர்கள் பெருங்குடி எஸ்.வி.ரவிச்சந்திரன், எம்.கிருஷ்ணமூர்த்தி, இரா.துரைராஜ், கே.கண்ணன், மு.ராஜா, துரை.கபிலன், சு.சேகர், நொளம்பூர் வே.ராஜன், வி.இ.மதியழகன், ஒன்றியக் கழக செயலாளர் கோவிலம்பாக்கம் வெங்கடேசன், தலைமைப் பொதுக்குழு உறுப்பினர்கள் சைதை மா.அன்பரசன், மேடவாக்கம் ரவி, ஆர்.பாலசுந்தரம், எஸ்.ஏ.அரிகிருஷ்ணன், அடையார் பி.ஜே.பாஸ்கர், தங்கராஜ், தா.பஷீர் மற்றும் ரத்னாலோகேஷ்வரன், பத்மபிரியா மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் எம்.விநாயகமூர்த்தி, ஆர்.கிருஷ்ணகுமார், ஜெ.இ.பாண்டியன், கோட்டூர் பிரகாஷ், சங்கர்கணேஷ், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் பா.அருண்குமார், சைதை சாதிக், கனிமொழிதனசேகரன், சி.பரிமேலழகர், எம். பார்த்திபன், நிஷா, சி.சுரேஷ், ஜெகதீஸன், மணிகண்டன் நாடிமுத்து, டாக்டர் அனீஷ், ஹரிபாபு, உள்ளிட்ட வட்ட கழக செயலாளர்கள், அணிகளின் மாவட்ட துணை அமைப்பாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள், பகுதி கழக நிர்வாகிகள், மாவட்ட பிரதிநிதிகள் மற்றும் அணிகளின் பகுதி அமைப்பாளர்கள் பங்கேற்று சிறப்பித்தனர்.

### மாவட்ட கழக பொறுப்பாளர் வல்லூர் எம்.எஸ்.கே.ரமேஷ் ராஜ் ஏற்பாட்டில்

# திருவள்ளூர் கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் பொது உறுப்பினர்கள் கூட்டம்!

## ஆர்.எஸ்.பாரதி- அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் சிறப்புரையாற்றினர்!

திருவள்ளூர் பிப் 21;

திருவள்ளூர் கிழக்கு மாவட்ட திமுக சார்பில் பொது உறுப்பினர்கள் கூட்டம் மீஞ்சூர் பாலகோட்டி திருமண மண்டபம் வளாகத்தில் மாவட்ட கழக பொறுப்பாளர் வல்லூர் எம்.எஸ்.கே.ரமேஷ்ராஜ் ஏற்பாட்டில் நடைபெற்றது இதில் மாவட்ட அவைத் தலைவர் மு.பகலவன் தலைமை தாங்கினார் ஒன்றிய நகர பேரூர் கழக செயலாளர்கள் மு.மணிபாலன், கி.வே.ஆனந்தகுமார், டி.கே.சந்திரசேகர், நா.செல்வசேகரன், ஆ.சத்தியவேல், கா.சு.ஜெகதீசன், ஜான் பொன்னுசாமி, ந.பரிமளம், மு.முரளிதரன், ஜி.ரவிக்குமார், இரா.அறிவழகன், அபிராமி குமரவேல், பி.முத்து, மீஞ்சூர் பேரூராட்சித் தலைவர் ருக்மணி மோகன்ராஜ் ஆகியோர் வரவேற்புரையற்றினார்கள் தலைமை செயற்குழு உறுப்பினர் ஜெ.மூர்த்தி, மாவட்ட நிர்வாகிகள் மு.கதிரவன், கே.வி.ஜி.உமாமகேஸ்வரி, எம்.எல்.ரவி, எஸ்.ரமேஷ், கே.சுப்பிரமணி, பி.வெங்கடாசலபதி, ஏ.வி.ராமமூர்த்தி, பா.செ.குணசேகரன், டாக்டர் பரிமளம் விஸ்வநாதன் ஆகியோர் முன்னிலை வகித்தார்கள்

இந்த பொது உறுப்பினர் கூட்டத்தில் கழக அமைப்பு செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் ஆகியோர் கலந்து கொண்டு பல்வேறு ஆலோசனை வழங்கினார்கள்

இதில் பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது

மார்ச் 1 அன்றும் கழக தலைவர் முதலமைச்சர் முத்துவேல் கருனாநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு திருவள்ளூர் கிழக்கு மாவட்டம் முழுவதும் உள்ள நகரம், பேரூர், ஊராட்சிகள், ஊர்கள் தோறும் கழக கொடியேற்றி, பல்வேறு நல திட்ட உதவிகள் பொதுக் கூட்டங்கள் மிக சிறப்புடன் நடத்திட வேண்டும்

இளைஞர் அணி மாணவர் அணி மற்றும் மகளிர் அணி தீவிர உறுப்பினர் சேர்த்திடவும் திருவள்ளூர் கிழக்கு மாவட்ட கழகத்திற்கு உட்டபட்ட பொன்னேரி, கும்மிடிபூண்டி தொகுதிகளுக்கு உட்பட்ட கிளைகளில் நமது கழக கொடி கம்பங்கள் நிறுவப்படாத இடங்களில் மாவட்ட கழக பொறுப்பாளர் தொகுதிக்கு தலா 200 கொடிகம்பங்கள் வழங்குவது எனவும்

ஒன்றிய அரசின் பட்ஜெட்டில் தமிழக அரசை அனைத்து வகைகளிலும் வஞ்சிக்கும் ஒன்றிய அரசை இப்பொதுக்குழு வன்மையாக கண்டிக்கிறது.

மூன்றாவதுமுறையாக ஈரோடுகிழக்கு சட்டமன்றத் தொகுதியில்வெற்றி பெற்று, தொடர்வெற்றிகளைக் குவித்துவரும் கழகத்தலைவர் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கும், திராவிட மாடல் ஆட்சி நல்லாட்சி என்பதற்கான நற்சான்றிதழாக, எதிரில் நின்ற அத்தனை வேட்பாளர்களும் கட்டுத்தொகை இழக்கும்படி, மாபெரும் வெற்றியைக் கழகத்துக்கு அளித்த ஈரோடு கிழக்கு சட்டமன்றத்தொகுதிமக்களுக்கும் இக்கூட்டம் நன்றியை தெரிவித்துக்கொள்கிறது.

திருவள்ளூர் கிழக்கு மாவட்ட பொறுப்பாளராக வல்லூர் ரமேஷ்ராஜ் நியமித்தமைக்காக, கழக தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கும், துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் கழக பொதுசெயலாளர் துரைமுருகன் மற்றும் கழக நிர்வாகிகளுக்கு திருவள்ளூர் கிழக்கு மாவட்டம் சார்பில் இக்கூட்டத்தின் வாயிலாக நன்றிகளை தெரிவித்துக்கொண்டு பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது

இக் கூட்டம் முன்னதாக மீஞ்சூர் வடக்கு ஒன்றிய கழகச் செயலாளர் சுகுமாரன் ,

மறைந்த முன்னாள் அமைச்சர் க.சுந்தரம் மனைவி எழிலினி மற்றும் திருவள்ளூர் கிழக்கு மாவட்டத்திற்கு பகுதியில் பல்வேறு கழக மூத்த முன்னோடிகள் கழக நிர்வாகிகள் மறைவிற்கு இக்கூட்டத்தின் வாயிலாக இரங்கலை தெரிவித்து இரண்டு நிமிடம் மௌன அஞ்சலி செலுத்தினார்கள்

இந் நிகழ்ச்சியில் அப்போது பேசிய ஆர்.எஸ்.பாரதி வருகிற 2026 சட்டமன்றத் தேர்தலில் கழக நிர்வாகிகள் கட்சித் தொண்டர்கள் ஒற்றுமையாக செயல்பட்டு 234 தொகுதிகளையும் கைப்பற்ற வேண்டும் கேட்டுக்கொண்டார்

சட்டமன்றத் தேர்தல் வரையறுப்பதால் திருவள்ளூர் கிழக்கு மாவட்டத்திற்கு உட்பட்ட பகுதிகளில் மும்முறமாக தேர்தல் பணிகளை ஆற்ற வேண்டும் தமிழ்நாட்டிலே அதிக வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்ற இடமாக திருவள்ளூர் கிழக்கு மாவட்டம் திகழ வேண்டும் என தெரிவித்தார்

பின்னர் பேசிய அமைச்சர் ஆவடி நாசர் கழக தலைவர் தளபதி அவர்கள் எப்படி இரவும் பகலும் ஓழாமல் உழைத்து இந்தியாவிற்கே முன் உதாரணமாக திகழ்கிறாரோ அதே போன்று கட்சித் தொண்டர்கள் இரவு பகல் இன்று பாராமல் உழைத்து தளபதி அவர்களை மீண்டும் முதலமைச்சராக வேண்டும் திராவிட முன்னேற்ற கழகத்தில் உழைப்பவர்கள் யாராயிருந்தாலும் தலைமை கழகம் கண்காணித்து அவர்களுக்கு உரிய பதவிகளிலும் பொறுப்புகளையும் வழங்கப்படும் அதேபோல்தான் மாவட்ட கழக பொறுப்பாளராக பதவியேற்று உள்ள எம்.எஸ்.கே ரமேஷ் ராஜ் அவரது உழைப்பை பார்த்து கழக தலைவர் அவர்கள் பணியாற்ற வாய்ப்பு வழங்கியுள்ளார் இதேபோல் கழக நிர்வாகி நீங்களும் கட்சிக்காக உழைத்தால் உங்களுக்கு உரிய பதவிகளை தேடி வரும் என்பது எந்த மாற்றுக் கருத்தும் இல்லை அதேபோல் கழக நிர்வாகிகள் மோடி அரசை கண்டித்து அவர்கள் இல்லம் முன்பு இந்தி வேண்டாம் தமிழ்நாட்டுக்கு நிதி எங்கே என்று கோலமிட்டு கண்டனத்தை தெரிவிக்க வேண்டும்

கழக நிர்வாகிகள் அனைவரும் ஒன்றாக இணைந்து தலைவர் அவர்கள் பிறந்த நாளை மிக சிறப்பாக கொண்டாட வேண்டும் என கட்சி தொண்டர்களிடம் கேட்டுக் கொண்டார் இதில் கும்மிடிப்பூண்டி சட்டமன்ற உறுப்பினர்டி.ஜெ.கோவிந்தராஜன், தொகுதி பார்வையாளர்கள் தமிழ் க.அமுதரசன், அழகிரி சதாசிவம், மாநில நிர்வாகிகள் சி.எச்.சேகர், சி.ஜெரால்டு, கே.ஜி.பாஸ்கர் சுந்தரம், வெ.அன்பு வாணன், ஜி.ஸ்டாலின், ஏ.ஆர்.டி.உதயசூரியன், ஏ.கே.சுரேஷ், நரசிங்க மூர்த்தி, நீலவழகன், மி.வி.கோதண்டம் ந.மோகன்ராஜ் , சீனி ஆத்திம்கனி, சி.மு.தேவன், பி.எஸ். கோபிநாதன் , கோ.மணி, தமிழ் இளங்கோவன் , லட்சுமணன் , நக்கீரன், பா.து.தமிழரசன், மோகன் குமார் பத்மாவதி வெங்கடம், பாஸ்கர் புனித வள்ளி வெங்கடாஜலபதி, நம்பாக்கம் வேணு, பெருஞ்சேரி ரவி, வாசகன், துரை, மார்ட்டின் , சிவஞானம், ராஜன், பிரேம்குமார், குப்புசாமி, நாகராஜ் , ஜனார்த்தனன், துர்கா வடிவில், ரவி , தமிழ் சாதிக் சாம்ராஜ், அப்துல் ரஷீத் , ஆர்.குமரவேல், சகிலா அறிவழகன், அலெக்ஸாண்டர், கேசவன், ஜி.ரவி, ராசாத்தி செல்வசேகரன், ராம ஜெயம், சாரதா முத்துசாமி, சித்ரா முத்துசாமி, சுதாகர் தமிழ்ச் செல்வி, பூமிநாதன், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் கே.வி.லோகேஷ் , ஜே.மோகன்பாபு, சங்கர், யுவராஜ், இரா.கதிரவன், வெற்றி ராஜேஷ், சம்பத்குமார் , முகமது அலவி, மு.தினகரன், டாக்டர் வில்சன், ரோஸ் பொன்னையா, தேசராணி தேசப்பன், மு.பாஸ்கரன், என்.கிருஷ்ணமூர்த்தி, கே.ஆறுமுகம், தனசேகர், கா.சம்பத், சுமன், எஸ்.கோபி, வி.பி.ரவிக்குமார், எம்.ஆர்.ஸ்ரீதர், ஜி. ரமேஷ், மணி, கே.ராஜேஷ், ஜெயலலிதா சசிதரன், லட்சுமி நாராயணன், ஒன்றிய நகர பேரூர் கழக நிர்வாகிகள் மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் தலைவர்கள் துணைத் தலைவர்கள் துணை அமைப்பாளர்கள் வார்டு கழக செயலாளர்கள் கிளைக் கழகச் செயலாளர்கள் முன்னாள் இந்நாள் உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள் கழக மூத்த முன்னோடிகள் அனைவரும் தவறாமல் கலந்து கொண்டார்கள் கூட்டம் முடிவில் மீஞ்சூர் பேரூர் கழக செயலாளர் க.சு.தமிழ் உதயன் நன்றிகூறினார்



பல்லாவரம் சட்டமன்ற தொகுதி தாம்பரம் மாநகராட்சி மண்டலம் –3 க்கு உட்பட்ட ரூ.1 கோடி36 இலட்சம் மதிப்பீட்டில் 22 வது வார்டில் பாலசுப்ரமணியம் தெரு உள்ளிட்ட 9 தெருகளிலும் , 23வது வார்டு குளக்கரை தெரு, நெமிலிச்சேரி மெயின் ரோடு, நெல்லிப்பேட்டை தெரு உள்ளிட்ட 11 தெருகளிலும், 25வது வார்டில் விஸ்வேஸ்வரன் தெரு, சுபாஷ் நகர் மெயின் ரோடு ,ஸ்கூல் தெரு மற்றும் நெல்லையப்பர் தெரு மழைநீர் வடிகால்வாய் உள்ளிட்ட 8 தெருகளிலும், 36வது வார்டில் பஸ் டிப்போ சாலை உள்ளிட்ட 29 தெருகளுக்கு புதிய தார் சாலைகள் அமைத்தல் பணிகளையும் 36,37,38 ஆகிய வார்டுகளில் தார் சாலை மறு சீரமைத்தல் பணிகளும் அஸ்தினாபுரம் துவக்கப்பள்ளியில் பள்ளி பராமரிப்பு சீர்படுத்தல் பணியும், 38வது வார்டு மகேஸ்வரி நகரில் நியாயவிலை கடை அமைத்தல் உள்ளிட்ட ரூ.1 கோடியே 36 லட்சம் மதிப்பீட்டில் நடைபெற உள்ள புதிய பணிகளுக்கு பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினர் இ.கருணாநிதி அடிக்கல் நாட்டி பணிகளை துவக்கி வைத்தார். அப்பொழுது பகுதி கழகச் செயலாளர் ஏ.கே.கருணாகரன், வட்ட கழக செயலாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள் மாநகராட்சி பொறியாளர் , கழக நிர்வாகிகள் பள்ளி பெற்றோர் ஆசிரியர் கழக நிர்வாகிகள், நல்வாழ்வு சங்க நிர்வாகிகள் ஆகியோர் உடன் இருந்தனர்.